# VOICE OF JESUS MAGAZINE




EDITOR IN-CHIEF:
BRO.VINCENT SELVAKUMAR

EDITORIAL:
BRO.JONATHAN
SIS.ANGELINE JONATHAN

HEAD OFFICE:
VOICE OF JESUS MINISTRIES
N.G.O COLONY, ANNA NAGAR
RAMANATHAPURAM - 623501
TAMILNADU, SOUTH INDIA

PHONE CALLS / WHATSAPP:
(+91) 9788 404 333
(+91) 9788 404 222
FACEBOOK:
VINCENT SELVAKUMAR
VSK.VOICE OF JESUS MINISTRIES
INSTAGRAM:
voiceofjesus ministries.VSK
Email:
voiceofjesus.info@gmail.com


# இயேசுவின் தொனி


JULY - 2022
TAMIL EDITION



# கர்த்தர் நித்தமும் நடத்துவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

**ஏசாயா 58:11**

## ஆசிரியர் பக்கம்

கிறிஸ்துவில் பிரியமானவர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த புதிய மாதத்திலும் உங்கள் யாவரையும் சந்திப்பதில் கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு நாளும் நம்மை எந்த ஆபத்துக ளும் அணுகிடாமல் தமது உள்ளங்கைகளில் ஏந்தி பாதுகாத்து நடத்தி வரும் தேவாதி தேவ னை மனதார துதிப்போம்.

இந்த நாட்களில் கல்வி சாலைகள் திறக்கப் பட்டு நமது பிள்ளைகள் செல்ல ஆரம்பித்தி ருக்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பிற்காக, மீண்டும் லாக்டவுன் போன்ற காரியங்களால் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படாதிருக் கும்படி நாம் இப்போதே ஜெபிக்க வேண்டும்.

கடைசி நாட்களில் தேவனின் மாபெரும் உல கம் தழுவின திட்டம் எழுப்புதல். இதற்காக நாம் அதிகமாக ஜெபித்தும், ஆயத்தப்பட்டும் வருகிறோம். இந்த எழுப்புதலானது நமது இந்திய தேசத்திலிருந்து தோன்றி உலகம் முழுவதும் பற்றிப் பரவும் என்பதாக தேவன் வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். இந்த எழுப் புதல் திட்டத்தில் திருச்சபைகளை ஆயத்தப் படுத்த வேண்டும் என்றும், எழுப்புதலில் சபை களின் பங்கும், பணிகளும் பிரதானமானது என்றும் கர்த்தர் நமக்கு முன்னறிவித்தபடி யால், இதை அடிப்படை நோக்கமாக கொண்டு எழுப்புதலில் சபை மேய்ப்பர்கள் என்கிற புத்த கத்தை வெளியிட்டு, இலவசமாக சபை போதகர்களுக்கு விநியோகித்து வருகிறோம். அநேக சபைகள் மகிழ்ச்சியோடு தேவ வார்த் தைகளை ஏற்றுக் கொண்டு, எழுப்புதலை பரவ செய்யும் திட்டத்தில் மகிழ்ச்சியோடு தங் களை இணைத்துக் கொண்டார்கள். தேவ னுக்கு நன்றி.!

நமது இயேசுவின் தொனி பத்திரிகையானது டிஜிட்டல் வடிவில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேஸ்புக், டெலிகிராம் போன்ற சோஷியல் மீடியாக்களில் பதிவேற்றம் செய் யப்படுகிறது. தவிர, பத்திரிகையை விரும்பிக் கேட்கும் தேவ பிள்ளைகளுக்கு வாட்ஸ்அப் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படுகிறது.

நீங்கள் தொடர்ந்து பெற விரும்பினால் உங் கள் வாட்ஸ்அப் எண்களை எங்களுடன் இணைத் துக் கொள்ளுங்கள். தேவ வார்த்தைகளை நீங் கள் மட்டும் பெற்றுக் கொள்வதுடன் நிறுத்தி விடாமல் உங்களுக்கு தெரிந்தவர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கலாம். தேவ வார்த்தை களை பரவச் செய்து ஜனங்களை ஆயத்தப் படுத்தும் ஊழியத்தில் நீங்களும் இணைந்து உதவி செய்யலாம்.

இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் நமது இயேசுவின் தொனி ஊழியத்தின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள விரும் பினால், (+91) 9788 404 333 / 222 என்கிற எங்கள் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசி எண் களை பயன்படுத்துங்கள். உங்கள் ஜெபத் தேவைகள் மற்றும் பிற தகவல்களுக்காக எந்த நேரத்திலும் எங்களுடன் தொடர்பு கொள்ள லாம். உங்கள் மேலான கருத்துக்களையும், நீங்கள் பெற்ற சாட்சிகளையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள மறவாதிருங்கள்.

வாட்ஸ்அப், தொலைபேசி மூலமாக எங்கள் அலுவலகத்துடன் எப்போது வேண்டுமானா லும் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்காக ஜெபிக்கும்படி எமது ஜெபக்குழுவினர் காத்தி ருக்கிறார்கள். தொடர்ந்து நம் ஊழியங்களுக்காக வும், பத்திரிகை பணிகளுக்காகவும் உங்கள் அனுதின ஜெபங்களில் ஜெபித்துக் கொள் ளுங்கள்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து கரம் பிடித்து நடத்துவாராக, ஆமென்.!

*Vincent Selvakumar*



செய்தி: சகோ. வின்சென்ட் செல்வகுமார்

# கொல்லும் மனநிலை மாற்றங்கள்

சென்ற இதழில் நாம் சந்தித்துக் கொண்டபோது இனி வருகிற காலம், அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கை எல்லாம் எப்படி இருக்கும் என்றும், என்னவிதமான தீமைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதைப் பற்றியும் பார்த்தோம். இன்றைய தியானத்தில் அதைப் பற்றி இன்னும் விரிவாக பார்ப்போம்.

### 1. தனிமனித சுதந்திரம்:

இனிவரும் காலத்தில் தனிமனித வாழ்வில் அரசாங்கமும், அமைப்புகளும் அவர்கள் சொல்லுகிறபடி வாழவும், நடந்து கொள்ளவும் வேண்டும் என்பதைப்போல தனி மனித உணர்வுகளில் தலையிடுவார்கள்.

நாம் வாழும் இந்த நாட்களிலும் காலங்கள் அப்படியாக மாறி வருகிறதை பார்க்கிறோம். எந்த நேரத்தில் கடைகளுக்குச் செல்ல வேண்டும், எந்த உடையை உடுத்த வேண்டும், எப்படி பேச வேண்டும் என்று எல்லாவற்றையும் வடிவமைத்து தனிமனித சுதந்திரத்தில் தலையிடுவதை பார்க்கிறோம். இப்படி செய்வது நல்லது போல தோன்றினாலும் இனிவருகிற நாட்கள் இப்படித்தான் இருக்குமென்பதை இந்தக் காலம் நமக்கு கற்றுத் தருகிறது.

காரணங்கள் பலவிதமாக சொல்லப்பட்டாலும், காரியத்தின் கடைத்தொகை என்னவென்று பார்த்தால், இது தனி மனித சுயாதீனத்திலும், வாழ்க்கையிலும், சுதந்திரத்திலும் தீவிரமாக தலையிடுகின்ற முயற்சிகளாக இருக்குமென்

பதையே காட்டுகிறது. நாம் முன்புபோல விரும்பினபடியெல்லாம் வாழ்வது கடினம். சட்டங்களுக்கு ஏற்றபடிதான் வாழ வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவது மட்டுமல்ல, வற்புறுத்தப்படவும் நேரிடும்.

### 2. மனிதர்களை அடிமைப்படுத்தும் முயற்சி:

இனி வருகிற காலங்களில் செயல்படுத்தப் போகிற திட்டங்களுக்கு, மறைமுகமான மிரட்டல் மூலமாக மனிதர்களை அடிமைப்படுத்த முயற்சிப்பார்கள். ஒரு காலத்தில் வெளி தேசங்களுக்கு போய் வருவது மிகவும் சுலபம்.

ஆனால், இப்பொழுது தடுப்பூசி போட்டு, அதற்குரிய சான்றிதழ் வைத்திருக்க வேண்டுமென்றும், இன்னும் பல சட்டங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. இனி வருகிற கால சூழ்நிலைகளில், சிப் பதித்திருந்தால் தான் எந்த இடத்திற்கும் போகவும், வரவும் முடியும் என்று சொன்னால், அதற்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். இதைப்பற்றி இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே, யோவான் வழியாக வெளிப்படுத்தின விசேஷத்தில் கர்த்தர் வெளிப்படுத்தி பேசியிருக்கிறார். வாசித்துப் பாருங்கள்.

*வெளிப்படுத்தின விசேஷம் 13:17*

*அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதன் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும்கூடாதபடிக்கும் செய்தது.*

அந்த மிருகத்தின் இலக்கத்தையோ, எண்ணையோ, முத்திரையையோ பதிக்காதவர்கள் விற்கவும், கொள்ளவும் கூடாதபடி கட்டுப்படுத்தப்படுவார்கள். இது மனிதர்களை தங்களுடைய திட்டங்களுக்கு அடிமைப்படுத்தும் முயற்சி.

இனி சாத்தானால் கொண்டு வருகிற உலக சம்பந்தமான அனைத்து திட்டங்களுக்கும் மனிதர்கள் அடிமைப்பட்டுத்தான் ஆக வேண்டும். அது மறைமுகமாகவோ, நேரடியாகவோ பயமுறுத்துகிறதாக இருக்கலாம். இதற்கு நடுவில்தான் கர்த்தருக்கென்று ஓடவும், சாட்சியாக நிற்கவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் வேண்டும்.

இப்பொழுது வந்த இந்தக் கொள்ளை நோய்கள் பற்றி நமக்குச் சொல்லப்படுகிற காரணம் சரியானதாக இருந்தாலும், இது மனிதர்களைவிட்டு மனிதர்களை பிரிக்கிற முயற்சி என்று அதை நுணுக்கமாகப் பார்த்தால் தெரிகிறது.

ஏன் மனிதர்களை விட்டு மனிதர்களை பிரிக்க சாத்தான் இவ்வளவு தீவிரம் காட்டுகிறான்? சமுதாய இடைவெளியை பின்பற்றுங்கள், வீட்டிற்குள் அடங்கியிருங்கள், எதுவானாலும் ஆன்லைன் அல்லது சமூக ஊடகங்களில் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, மனிதர்களை விட்டு மனிதனைப் பிரித்து, மனித இணைப்புகளை மாற்றி அமைக்கிறார்கள்.

### 3. மனிதர்களைப் பிரிக்கும் முயற்சி:

கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தின் அடிப்படையில் இன்றைக்கு குடும்பங்கள் துண்டு துண்டாக உடைந்திருக்கிறதைப் பார்க்கிறோம். ஒரு காலத்தில் கூட்டுக் குடும்ப முறைகள் நம் தேசத்தில் இருந்தது.

ஒரு வேளை அப்படி வாழ சாத்தியமில்லாத நிலை இருந்தாலும், பள்ளி விடுமுறை நாட்களில் பிள்ளைகள் தங்கள் தாத்தா, பாட்டி வீடுகளுக்கு போகிறதை பார்த்திருக்கிறோம். அல்லது சபையார் கூடி வரும் போது தங்கள் அன்பை பகிர்ந்துக் கொள்வார்கள். நாளடைவில் கலாச்சாரத்தினால் இந்தக் கூடி வருதல் குறைந்துவிட்டது.

ஜனங்கள் கூடி வரும்பொழுது தொற்று வேகமாக பரவுகிறது என்பது சரியென்பதாக காணப்பட்டாலும், இதன் உள்நோக்கம் பிரிப்பதுதான். இனி வரப்போகிற நாட்களுக்கு இதெல்லாம் முன்னடையாளமாக காட்டப்படுகிறது.

### மனிதர்களைப் பிரிக்க சாத்தான் தீவிரம் காட்டுவது ஏன்?

ஒவ்வொரு மனிதனும் இரண்டு பிரதான காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று இயேசுகிறிஸ்து கற்பித்திருக்கிறார். அது மனிதர்களின் கடமை.

# சாத்தானின் தந்திரம்.....

**மனிதர்களை விட்டு மனிதர்களை பிரிக்கும் முயற்சியில் சாத்தான் தற்போது தீவிரம் காட்டி வருவது இனி வருகிற காலங்களுக்கு முன் அடையாளமான காரியம். வரப்போகும் மனச்சோர்வு மிகுந்த காலத்தை எதிர்கொள்ள இன்றே தேவ பலத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.**



**-கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.**

**-கர்த்தரின் பிரமாணங்களை நிறை வேற்றவேண்டும். அவருடைய கட்ட ளைகளை நிறைவேற்ற வேண்டும்.**

வாசித்துப் பாருங்கள்.

*மத்தேயு 22: 37-40 - இயேசு அவனை நோக்கி: உன் தேவ னாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் மன தோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற் பனை. இதற்கு ஒப்பாயிருக் கிற இரண்டாம் கற்பனை என் னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதைப்போலப் பிறனிடத்திலும் அன்புகூரு வாயாக என்பதே. இவ்வி ரண்டு கற்பனைகளிலும் நியா யப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கி யிருக்கிறது என்றார்.*

மேற்சொன்ன வசனங்களை கவனமாய் வாசித்துப் பார்த்தால், தேவனுடைய எல்லா கட்டளைகளையும், பிரமாணங்களையும் நிறைவேற்ற நாம் இரண்டு பிரதான காரியங்களைச் செய்தால் போதுமானது.

**- முதலாவது, நம் தேவனை அறிந்து கொண்டு, அவரிடத்தில் முழு அன்பை காட்ட வேண்டும்.**

**- இரண்டாவது, நம் அயலாரை நேசிக்க வேண்டும். அன்பு செலுத்த வேண்டும்.**

அயலான் என்பது உங்களுக்கு தெரிந்த வர்களோ, உறவினர்களோ அல்ல. உங்க ளுக்கு யார் என்று தெரியாத மனிதர்கள். ஆனால் அவர்கள் ஏதோ ஒரு தேவை யிலோ, பிரச்சனையிலோ இருப்பவர்கள்.

வேதத்தில் பாருங்கள், நல்ல சமாரியன் உதவி செய்தபோது அடிபட்டுக் கிடந்தவன் யாரென்றே தெரியாது. ஆனால், அவன் தேவையிலும், பிரச்சனையிலும் இருக் கிறான் என்பதை கண்டதும் உதவி செய் தார். இதுதான் அயலான்மேல் காட்டும் அன்பு.

சிலர் தவறாக புரிந்து கொண்டு, ஏதாவது ஒரு கட்டளையை செய்துவிட்டால் போதும் என்று நினைத்தால் ஏமாந்து போக நேரி டும். தேவன் சொல்லுவது என்னவென் றால், நம் கண்களுக்கு முன் ஒரு மனிதன் அடிபட்டு கிடந்தால், அவனுக்கு இரக்கம் செய்ய வேண்டும் என்று தான்.

இன்றைக்கு பலர் தன் மட்டில் பக்தியாயி ருக்கிறேன். ஊழியம் செய்கிறேன். மற்ற வர்களைப்பற்றி கவலையில்லை. அவர் கள் தேவைகளிலிருந்தாலும், போராட்டத் திலிருந்தாலும், வியாதியிலிருந்தாலும் நான் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய வேண்டுமென்று சொல்லுகிறதைப் பார்க் கிறோம். ஆனால் கர்த்தர் சொல்லுகிறார், இந்த இரண்டு கட்டளைகளையும் நிறை வேற்றினால் தான் தேவனுடைய சித்தத்தை பரிபூரணமாக நிறைவேற்ற முடியும் என்று.



தேவனை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அன்பு செய்ய வேண்டும். அதுபோல, நம்மை நாம் நேசிப்பதுபோலவே நம்முடைய அயலாரையும் நேசிக்க வேண்டும். இது நம் கடமை..

அப்படியானால் ஒரு மனிதன் தேவனு டைய கற்பனைகளை முழுமையாக நிறை வேற்றி, தேவ மனிதனாக வாழ வேண் டுமென்றால் இரண்டு காரியங்கள் தேவைப் படுகிறது.

### தேவன்:

தேவனை அறிந்து கொள்ளவும், தேவனுக் கடுத்த காரியங்களில் ஈடுபடுத்திக் கொள் ளவும் வேண்டும். தேவனை நேசிக்கப் பழக வேண்டும். அந்த தேவன் உண்மை யுள்ள தேவனாக இருக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரிந்ததை, பார்க்கிறதை எல்லாம் தெய்வமாக சொல்லக்கூடாது. இயேசு சொன்னார், 'நானே வழியும் சத் தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று. ஆகவே, மெய்யான தேவனைக் கண்டு கொண்டு நாம் அவர் மேல் முழு இருதயத் தோடும், முழு மனதோடும் அன்பு செலுத்த வேண்டும்.

### மனிதன்:

இரண்டாவது கட்டளையை நிறைவேற்ற வேண்டுமானால் மனிதன் தேவை என் பதாக வேதம் நமக்குக் காட்டுகிறது. இப் பொழுது மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைக்க முடியாவிட்டால், சமு தாயத்திலிருந்து பிரித்து வைக்கப்பட்டால் எப்படி இரண்டாவது கட்டளையை நிறை வேற்ற முடியும்?

அப்படியானால் மனிதர்களை விட்டு மனி தர்களை பிரிப்பதன் மூலம் கர்த்தரின் கற் பனைகளை நாம் நிறைவேற்ற முடியாதபடி செய்துவிடும். இனி வருகிற காலம் இப் படித்தான் இருக்கும்.

இந்நாட்களை சந்திப்பது எப்படி? ஊழி யங்களை நிறைவேற்றுவது எப்படி என் பதை நாம் அறிந்துகொண்டு, அந்தக் காலத் திற்கு ஏற்றபடி தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான வழிகள் நிச்சயம் இருக்கும். ஆனால், அந்த வழிகளை நாம் தான் தேடி கண்டுபிடித்து, தகுதிப்படுத்திக் கொண்டு, அடுத்த கட்டத்திற்கு போகவும், ஓடவும் வேண்டும்.

### 4. மனநிலை மாற்றங்கள்:

இனிவரும் காலங்களில் மனிதன் மனி

தனை விட்டுப் பிரிக்கப்படுவதால் மனநிலையில் மாற்றங்கள் உண்டாகும். மனிதர்கள் கோபம் உள்ளவர்களாக, தீவிர மனநிலை கொண்டவர்களாக மாறுவார்கள். கடைசி நாட்களில் மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்று வேதம் சொல்லுவதை வாசித்துப் பாருங்கள்.

*2 தீமோத்தேயு 3:2-5*

*எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,*

*சுவாப அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,*

*துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும்,*

*தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.*

இப்படிப்பட்ட தீவிர மனநிலை கொண்ட மனிதர்கள் காரணமில்லாமல் எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறவர்களாக, கொலை செய்யத் துணிந்தவர்களாக, பாவம் செய்யத் தீவிரிக்கிறவர்களாக இருப்பார்கள். காரணம், அவர்களுக்கு பலவிதமான பிரச்சனைகள்.

குடும்பத்தைக்குறித்த பாரம், கவலை. எதிர்காலத்தைக்குறித்த பயம், மனச்சோர்வு. இவைகள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, மனநிலையில் பெரிதாக பாதிக்கப்பட்டு தான் இருப்பார்கள்.

இப்படிப்பட்ட ஜனங்களுக்கு நடுவில் தான் கர்த்தரை அறிவிக்கவும், ஊழியங்களை நிறைவேற்றவும் வேண்டும். அதற்காக இப்போதே நம்மை பலமுள்ளவர்களாக ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

### தேவைகள் நிறைந்த ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்ய என்ன செய்ய வேண்டும்?

மனிதர்களுக்கு பல தேவைகள் இருக்கும். தேவைகள் நிறைந்த நேரத்தில் ஊழியத்தில் எதை முக்கியப்படுத்தவும், கொண்டு போகவும், பிரதானப்படுத்தவும் வேண்டுமென்பதை நாம் தான் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும்.

இனி வருகிற நாட்களில் சில சட்டங்கள் பகிரங்கமாக, சாத்தானின் மனநிலைக் கொப்பான சட்டங்களாக இருக்கும். யாரும் எதிர்த்து பேசமுடியாது. சட்டதிட்டங்கள் வேதத்திற்கு எதிரானதாய் இருக்கும். இப்போதே பார்த்தால், சமுதாயத்தில் ஆளுகிறவர்கள், வசதியுள்ளவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உலகத்தை கொண்டுவர முயற்சிக்கிறார்கள். காரணம், உலகத்தை அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள்.

ஆம்.. வரப்போகிற அந்திகிறிஸ்துவுக்கு உலகத்தை ஆயத்தப்படுத்தும் பணிகளை தீவிரமாய் செய்வார்கள். இவைகளை செய்வது சாத்தானின் ஆவியால் பிடிக்கப்பட்டு கிரியை செய்கிறவர்கள் தான். இவர்களை வேதம் அந்திக்கிறிஸ்துக்கள் என்று சொல்லுகிறது. அந்திக்கிறிஸ்துக்கள் இப்போதே கிரியை செய்கிறார்கள் என்பதாக எழுதப்பட்டுள்ளது.

### அந்திக்கிறிஸ்துக்களின் கிரியைகள் என்ன?

**- நமக்குள்ளதை சாத்தான் தனக்கென எடுத்துக் கொள்வான்:**

இனி வருகிற காலத்தில் சாதாரண ஜனங்கள், உலகில் உயர்ந்திருக்கிறவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் பயன்படும்படியாக வற்புறுத்தப்படுவார்கள்.

வெகு ஜனங்களின் கைகளிலுள்ள ஆஸ்திகள், சம்பாத்தியம், திறமை, வேலை என அனைத்தையும் பிடுங்கி, உலகின் உயர்ந்த, பெரிய நிலையிலுள்ள மனிதர்களுக்கு கொடுத்து அவர்கள் உயர்த்தப்படுவார்கள். குறிப்பாக, அவையாவும் ஆளுமை, அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு பயன்படும் என்பதைத் தாண்டி சாத்தானுக்கு பயன்ப



வரப்போகும் அந்திக்கிறிஸ்துவுக்கு உலகத்தை ஆயத்தப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறது.



**இனி வருகிற காலம் கொடுமைகள் நிறைந்ததாகவும், இடுக்கங்களும் துன்பங்களும் நிறைந்ததுமாயிருக்கும். இவைகளைக் கண்டு மனம் பதறாமல் கர்த்தருக்குள் திடன்கொள்ளுங்கள்.**

எதிர்கொண்டு ஓட வேண்டும். அதற்கென இப்பொழுதே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்களை நாம் போடவேண்டும். அதை விட்டுவிட்டு புலம் பிக்கொண்டிருக்கக்கூடாது. இந்த கொள்ளை நோயின் காலம் இவைகளை நமக்கு வலி யுறுத்திக் காண்பித்திருக்கிறது.

இவைகளை தவிர, இன்னும் அலை அலை யான பல்வேறு கால சூழ்நிலைகளும், தீமைகளும் வரும் என்பதை வேதம் நமக் குச் சுட்டிக் காண்பித்திருக்கிறது. கடைசிக் கால ஊழியம் என்பது இப்பொழுது இருப் பதுபோல, அல்லது நாம் கற்பனை செய்து வைத்திருப்பது போல சுலபமாக இருக்காது.

கடைசிக் காலம் என்பது மிகவும் கொடுமை நிறைந்த நாட்களாகவும், இடுக்கமும் துன் பமும் மிகுந்த காலமுமாய் இருக்கும். அந் தக் காலங்களை வேதத்தில் வாசித்துப் பார்ப்பதைவிட, அதன் சாயல்களை அனு பவித்து பார்க்கும்போது தான் இனி வரு கிற காலம் எப்படியிருக்கும் என்பதை தெளி வாகப் புரிந்து கொள்ள முடியும்.

டுவதற்காக வற்புறுத்துவார்கள்.

இனி வருகிற காலங்களில் நீங்கள் சம்பா திக்கிற பணத்தில் பெரும்பகுதிம் 'வரி' என்கிற முறையில் பிடுங்கப்பட்டு வேறு ஒரு கூட்டத்திற்கு கொடுக்கப்படும். இப்ப டிப்பட்ட கால சூழ்நிலையில், எல்லாவற் றையும் தங்களுக்குப் பயன்படுத்த வேண் டும் என்று வரும்போது சபைகளை மட் டும் விட்டுவைப்பானா என்று யோசித்துப் பாருங்கள்.

சபைகள் சாத்தானுக்கும், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பயன்பட வேண்டும் என்று தீவிரமாகத் திட்டமிடப்படும். நாம் கஷ்டப்பட்டு சம்பா தித்து வைத்த யாவும் சாத்தானுக்கும், அவன் கூட்டத்தாருக்கும் பயன்படுத்தப் படும். ஏன்? நம் பிள்ளைகள் கூட அவர்க ளுக்குத்தான் பயன்படுவார்கள்.

வேதத்தில் சொல்லப்பட்ட சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். 1 சாமுவேல் 8ம் அதிகாரம். இஸ்ரவேல் ஜனங்கள் சாமு வேலிடத்தில் வந்து எங்களை ஆளுமை செய்ய ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று முறையிட்டார்கள்.

சாமுவேல் தேவனை நோக்கி விண்ணப் பம் பண்ணுகிறார். அப்பொழுது கர்த்தர் சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள். ''அவர்கள் உன்னையல்ல. நான் அவர் களை ஆளாதபடிக்கு என்னைத் தான் தள் ளினார்கள். உங்களை ஆளும் ராஜா உங் களது ஆஸ்தியையும், ஐசுவரியங்களை யும் தனக்கென்று எடுத்துக் கொண்டு, உங் கள் பிள்ளைகளை தனக்கு அடிமைகளாக வைத்துக் கொள்வான்'' என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அதுதான் இப்பொழுதும் நடக்கிறது. ஆளுமை செய்கிறவர்கள் நம் பிள்ளைக ளையும் தங்களுக்கென பணி செய்யும்படி பயன்படுத்தி, அவர்களுக்கென்று எடுத்துக் கொள்வார்கள். மட்டுமல்ல, தேவனுக் கென்று நாம் செய்யும் காரியங்களையும் பிடுங்கிக்கொண்டு போய் தங்களுக்கென பயன்படுத்திக் கொள்வார்கள். திருச்சபை களையும், காணிக்கைகளையும், ஊழியர் களையும், கிறிஸ்தவ ஊடகங்களையும் கூட எடுத்துக்கொண்டு தங்கள் பயன்பாட் டிற்கு வைத்துக் கொள்வார்கள்.

இப்படிப்பட்ட காலம் தான் தீவிரித்து வரு கிறது. இந்தக் காலங்களை தான் நாம்

அதற்காகத்தான் கர்த்தர் இந்த தீமையின் நாட்கள் வழியாக நம்மை நடத்திக் கொண் டுபோனார். இது ஒரு எச்சரிக்கையின் நாட் கள். இதற்கே மனம் பதறிப் போனால் எப் படி? திடன்கொள்ளுங்கள். நாம் ஓட வேண் டிய தூரம் இன்னும் இருக்கிறது..!

இனி ஒன்று மாற்றி ஒன்று அலையலை யாய் வந்து கொண்டே தானிருக்கும் என்று கர்த்தருடைய வேதம் சொல்கிறது. இனி நாம் பார்க்கப் போகும் காலம் எப்படிப் பட்டதாக இருக்கும்.

அந்தக் காலங்களை எதிர்க்கொள்வது எப் படி? அந்தக் காலங்களை எதிர்கொள்ளா மல் போவது யாருக்கு சாத்தியமாகும்? யாரெல்லாம் அதில் நிற்க முடியாமல் போகும் என்பதைப்பற்றி இனி வரக்கூடிய தியானங்களில் பார்ப்போம்.

கர்த்தர் நம்மோடு பேசிக் கொண்டிருக் கிறார் என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்மைச் சுற்றிலும் நடப் பதை உற்று கவனிக்க வேண்டும். அதற்கு உங்களையும், உங்கள் குடும்பத்தையும், சபைகளையும் ஆயத்தப்படுத்த வேண் டும். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். அவரை சந்திக்க ஆயத்தப்படுவோம். ஆமென்..!

# தீர்க்கதரிசன தலைமுறை தொடர்

## சகோ. வின்சென்ட் செல்வகுமார்

இவர்களைத் தாண்டி இன்னொரு விதமான ஊழியர்களும் கடைசிக்காலத்தில் எழும்பப் போகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய வருகைக்கு இந்த முழு உலகத்தையுமே ஆயத்தப்படுத்தப் போகிறவர்கள். இந்தக் கடைசிக்கால ஊழியத் தலைமுறை பழைய ஏற்பாட்டுக் காலத்திலோ, புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவர்கள் கடைசிக் காலத்திற்கென்றே பிரத்தியேகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய பணிகள் கடைசிக் காலத்தில்தான் துவங்குகிறது. வருகையில் முற்றுப்பெறுகிறது.

இந்தக் கடைசிக்கால ஊழியத் தலைமுறையின் வடிவம் கர்த்தருடைய சிந்தையில் துவக்கம் முதலே இருந்தது. அது கடைசிக்காலத்தில் வடிவம் பெற்று பிறப்பிக்கப்படப் போகிறது.

இவர்கள் யாவருமே தீர்க்கதரிசிகள். இவர்களைப் பிறப்பிக்கும் அபிஷேகமே கடைசிக்கால அபிஷேகம். இந்த அபிஷேகம்தான் யோவேல் தீர்க்கதரிசியால் முன்னறிவிக்கப்பட்டு, அப்போஸ்தலர்கள் காலத்தில் வழிமொழியப்பட்ட அபிஷேகம். இது வெளிப்படும் காலம் கடைசிக்காலம்.

கர்த்தர் தம்முடைய பணிகளைச் செய்ய ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு விதமான அபிஷேகத்தை அனுப்பினார். ஆயினும் ஆவியானவர் ஒருவரே, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கிரியை செய்த அபிஷேகத்துக்கும், புதிய ஏற்பாட்டில் கிரியை செய்த அபிஷேகத்திற்கும் வித்தியாசம் இருந்தது.

அதேபோல கர்த்தர் கடைசிக்காலத்துக்கும் ஒரு அபிஷேகத்தை வைத்திருக்கிறார். இதன் கிரியைகளும், வல்லமையும் வித்தியாசமானது. அது கடைசிக்காலத்தில் தான் பொழியப்படப் போகிறது.

இந்தஅபிஷேகம் பொழியப்படுகையில் ஒரு புதிய தலைமுறை ஊழியர்கள் எழும்புவார்கள். அவர்கள் கடைசிக் காலம் ஊழியத் தலைமுறையாக செயல்படுவார்கள்.

யோவேல் தீர்க்கதரிசிக்கு கர்த்தர் வெளிப்படுத்திய இந்த அபிஷேகம் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அவருடைய சபையின்மேல் இறங்கின அபிஷேகம் அல்ல. ஏனெனில் இந்தக் கடைசிக்கால அபிஷேகம் இறங்கும் காலத்தையும் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார்.



வாசித்துப் பாருங்கள்:(யோவேல் 2:23-29)

*சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறுங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கெனவே வருஷிக்கப் பண்ணுவார்.*

*களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.*

*நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும் முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.*

*நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டுத் திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.*

*நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.*

*அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும், தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.*

*ஊழியக்காரர்கள் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்.*

மேலே சொல்லப்பட்டிருக்கும் இந்த வசனங்களில் கர்த்தர் பொழியப் போகும் கடைசிக் கால அபிஷேகம் பற்றி மாத்திரமல்ல, அந்த அபிஷேகம் பொழியப்படப்போகிற காலக்குறிப்பும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

காலக்குறிப்பு எங்கே இருக்கிறது? யோவேல் 2:28ல் சொல்லப்பட்டிருக்கும் 'அதற்குப் பின்பு' என்ற பதத்தைக் கவனியுங்கள். இந்த இடத்தில் எதற்குப் பின்பு என்ற கேள்வியை எழுப்புங்கள். அதற்கான பதில் மேலே சொல்லப்பட்டுள்ள வசனங்களில் அடங்கியிருக்கிறது.

இஸ்ரவேல் தேசம் ஒரு விடுதலையான, சுபிட்சமான, தன்னிறைவு அடைந்த நிலையில் காணப்படும் நாட்களில்தான் கர்த்தர் இந்த அபிஷேகத்தை அனுப்பப்போகிறார்.

இதைக் குறிக்கும் சொற்கள் தான் களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரமும் எண்ணெயும் வழிந்தோடும். நீங்கள் சாப்பிட்டு திருப்தியடைவீர்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் சம்பவித்த பின்பு தான் மாம்சமான யாவர்மேலும் தம்முடைய அபிஷேகத்தை பொழிந்தருளுவார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சீஷர்கள் மேல் அபிஷேகம் இறங்கின சமயத்தில் இஸ்ரவேலர்கள் புசித்துக்குடித்து திருப்தியாயிருக்கவில்லை.

அவர்கள் ரோமர்களால் அடிமைப்படுத்







நம் இயேசுவின் தொனி பத்திரிக்கை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கீழ்காணும் சமூக வலைதளங்கள் மூலம் வெளியிடப்படுகிறது. பத்திரிகையை **PDF FORMAT**-ல் பெற்றுக் கொள்ள விரும்பினால் கீழ்கண்ட நமது வாட்ஸ்அப் எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களுடன் நமது பத்திரிகையை பகிர்ந்து கொள்ளுங்கள்.

**VOICE OF JESUS MINISTRIES**

**( +91 ) 9788 404 333**

**TAMIL & ENGLISH**

# இரேனியஸ்



இரேனியஸ் அவர்களின் முழுப்பெயர் சார்லஸ் தியாபிலஸ் ஈவால்ட் ரேனியஸ் என்பதாகும். இவர் கி.பி 1790 ம் ஆண்டு ஜெர்மன் நாட்டில் கிராண்ஸ் கோட்டையில் பிறந்தார். இவரது தந்தை ஆடோ ரேனியஸ். இரேனியஸ் அவர்கள் இங்கிலாந்தி லுள்ள மிஷினரி சங்கத்தார் அனுப்பியதன் பேரில் 1814-ம் ஆண்டு தென்னிந்தியா வந்து சேர்ந் தார். இராயபுரத்தில் தங்கி வேதாகம மொழிபெ யர்ப்பில் ஈடுபட்டிருந்த மற்றொரு மிஷினரியா கிய ராட்லர் என்பவர் தமது வயதான காலத்திலும் இப்பணியில் மிகுந்த கஷ்டத்துடன் ஈடுபட்டிருந்த தைக் கண்டு, அதனால் ஈர்க்கப்பட்ட இரேனியஸ் தா மும் இப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வராக தமிழ் கற்கவும், ராட்லருக்கு உதவிகள் செய்யவும் துவங்கினார். நெல்லையின் அப்போஸ்தலன் என்றழைக்கப் பட்ட ரேனியஸ் நெல்லையின் பல கிராமங்களில் சுவிசேஷப்பணி செய்தாலும் தன் வாழ்நாள் முழுவதிலும் வேதாகம மொழி பெயர்ப்பு செய் வதை நிறுத்தவில்லை. *' திருநெல்வேலியின் அப்போஸ்தலர் '* என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர், பாளையங் கோட்டையில் முதன் முதலாக 1823 ம் ஆண்டில் பெண்களுக்கான பாடசாலை ஒன்றை அமைத்தார். கடைசிவரை துண்டுப் பிரதிகள் விநியோகம் செய்யும் ஊழியத்தை மறவாமல் செய்த இவர், 1838ம் ஆண்டில் கர்த்தருக்குள் நித்தி ரையடைந்தார்.



தப்பட்ட நிலையில் தங்கள் தேசத்தில் தாங் களே ஒரு அடிமைகளைப் போலிருந்தார் கள். அந்தச் சமயத்தில் அவர்கள் களங்கள் நிரம்பி வழியவோ, அவர்கள் எண்ணை கள் பெருகியிருக்கவோ இல்லை.

அடிமைத்தன வாழ்வில் தினசரி வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் என் பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

அதற்குப் பின்பும் ஏறத்தாழ கி.பி 1948வது ஆண்டு வரைக்கும் அவர்களுக்கு சொந்த தேசமும் இல்லாமலிருந்தது. அவர்கள் கைகளில் தேசம் கொடுக்கப்பட்டு, அவர் கள் சுயாட்சியடைந்து, தங்கள் தேசத்தைச் சீரமைத்து அவர்கள் தங்களை வளப்படுத் திக்கொள்ள 1948க்கு பிறகும் காலங்கள் தேவைப்பட்டது.

இன்றைக்கு இஸ்ரவேல் ஒரு தனித் தேச மாக, தங்கள் கையின் பிரயாசத்தை தாங் களே சாப்பிடும் வண்ணமாக ஒரு விடுத லையும், சம்பூரணமுமான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தச் சமயம்தான் கர்த்தர் சொல்லியிருக் கும் அபிஷேகம் பொழியப்படுகிற காலம். இந்த அபிஷேகம் தான் ஒரு புதிய தலை முறையை கர்த்தருக்காக எழுப்பும்.

அது கடைசிக்காலத் தலைமுறை. கர்த்தருக் காக முழு உலகத்தையுமே ஆயத்தப்படுத் துகிற தலைமுறை. (தொடரும்)

# பிரகாசிக்கும் விண்மீன்கள்

## எஸ்தர்



வேதத்திலுள்ள ஆகமங்களில் இரண்டு புத்தகம் மட்டுமே பெண்களின் பெயரில் உள்ளது. அப்படிப்பட்ட விசேஷித்த பெண்களில் ஒருவர் தான் எஸ்தர் ராஜாத்தி. புற தேசத்தில் தாய், தகப்பன் இல்லாமல், தன் வளர்ப்பு தந்தை மொர்தெகாயின் பராமரிப்பில் வளர்ந்தவள். ஒரு எளிய பெண்மணி இத்தனை மகிமையான ஸ்தானத்தை பெறக் காரணம் என்ன? என்பதை தியானிக்கலாம்.

- கர்த்தருடைய கரத்தில் இருக்கிற எதுவொன்றும் விசேஷமானதே..!

யோசேப்போடு கர்த்தர் இருந்தபடியால், அவன் செய்ததெல்லாம் வாய்த்தது. மட்டுமல்ல, எந்த இடத்திற்கு யோசேப்பு கொண்டு போகப்பட்டாலும் அவர்களின் கண்களில் தயை கிடைத்தது. அதுபோலவே 127 தேசங்களை அரசாட்சி செய்த அகாஸ்வேரு ராஜா, தன்னால் தள்ளப்பட்ட ராஜாத்தியாகிய வஸ்தியின் ஸ்தானத்தில் பட்டத்து ராணியை தேர்வு செய்யும்படி கன்னிப் பெண்களை கொண்டு வர செய்தான். அங்குள்ள ஸ்திரிகளை காவல் பண்ணுகிற யேகாய் என்கிற மனிதனின் கண்களில் எஸ்தருக்கு தயவு கிடைத்தது. ஆம்.. எஸ்தர் கர்த்தரின் கரத்தில் இருப்பவள் என்பதை உறுதிப்படுத்திற்று.

மட்டுமல்ல, அகாஸ்வேரு ராஜா சகல ஸ்திரிகளை பார்க்கிலும் எஸ்தர் மேல் அதிக அன்பு வைத்தான். (எஸ்தர் 2:17) ராஜாத்தியாக முடி சூட்டப்பட்டாள் எஸ்தர். தேவனின் பார்வை நம்மேல் பட வேண்டுமானால் எஸ்தரைப்போல சரியானபடி நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவன் முன்குறித்த பாத்திரங்கள் எத்தனை தான் எளிமையானதும், உதவாததுமாய் காணப்பட்டாலும், ஏற்ற வேளை வரும் போது அது உயர்ந்த ஸ்தானங்களில் அமரும் என்பதற்கு எஸ்தரே முன்னுதாரணம்.

**உயர்விலும் தாழ்மை:**

பட்டத்து ராணியாக முடி சூட்டப்பட்ட எஸ்தர், தான் முன்பு கீழ்படிந்தபடியே தன் வளர்ப்பு தந்தையான மொர்தெகாயின் சொற்கேட்டு நடந்தாள். தன்னுடைய குலத்தையும், பூர்வத்தையும் அறிவிக்கக்கூடாது என்று மொர்தெகாய் சொன்னதை கேட்டு, அப்படியே கீழ்படிந்து நடந்தாள்.

இன்றைய நாட்களில் பலர் ஒரு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளும்வரை கர்த்தருடைய பாதத்தில் ஜெபத்திலும், தாழ்மையிலும் இருப்பார்கள். ஆனால் கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்தியதும் ஜெபிப்பதற்கு கூட நேரமில்லை என்று சொல்லி, தங்கள் ஸ்தானத்தை மறந்துபோவார்கள். இது எத்தனை வேதனையான காரியம். எஸ்தரோ அப்படி செய்யவில்லை.

கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தும் கருவியாக, சரித்திரத்தை மாற்றும் சாதனை பெண்களாக நாம் மாற விரும்பினால்,

- எப்படிப்பட்ட உயர்விலும் தாழ்மையைத் தரித்துக் கொள்ள வேண்டும்.
- எல்லாவற்றிலும் கர்த்தரையே நோக்கிப் பார்க்க வேண்டும்.
- எந்த நிலையிலிருந்து வந்தோம் என்பதை மறவாதிருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

**ஜீவனையும் பாராத வைராக்கியம்:**

மொர்தெகாய் ஆமானை வணங்கவில்லை என்பதைக் கண்டு, ஆமான் கோபங்கொண்டு, எல்லா தேசங்களிலும் வாழும் யூத ஜனங்களை அழித்துவிட வேண்டுமென்று சொல்லி நாள் குறித்தான்.

அந்நாட்களில் ராஜ சபையில் ஒரு சட்டம் இருந்தது. ராஜா அழைக்காமல், அவரைப் பார்க்க போகிற யாரானாலும் ராஜா பொற்செங்கோல் நீட்டாவிட்டால் மரணத்தை

சந்திக்க வேண்டும் என்பதே அந்த சட்டம். எஸ்தர் ராஜாத்தி இந்த சட்டத்தை நன்றாய் அறிந்திருந்த போதிலும், தன் ஜனங்களுக்காக வைராக்கியம் கொண்டு தன் ஜீவனையும் பாராமல், "நான் செத்தாலும் சாகிறேன்" என்று வைராக்கியத்தோடு ராஜாவின் முன்பாக தைரியமாய் சென்று தன் ஜனங்களுக்காக நின்றாள் எஸ்தர்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் பாவம் செய்து கர்த்தரை கோபப்படுத்தின போதெல்லாம், கர்த்தர் ஜனங்களை அழிக்காதபடி திறப்பில் நின்றார் மோசே. என் ஜனத்திற்காக நான் ஒரு மனிதன் அழிக்கப்பட்டால் நலமாயிருக்கும் என்று சொன்ன பவுலைப்போல, தன் ஜனங்களுக்காக வைராக்கியத்துடன் திறப்பில் நின்றாள் எஸ்தர்.

இன்றைக்கு நம் தேசத்தில் ஜனங்களின் பாவங்களின் நிமித்தம் ஏற்படும் கொடுமையான தீமைகளை பார்க்கிறோம். கொள்ளை நோயினால், கொத்துக் கொத்தாக மரித்து விழுந்த ஜனங்களை பார்க்கிறோம். நம்மை சுற்றிலும் இருள் பலம் பெற்றுக் கொண்டே வருவதைப் பார்க்கிறோம். எஸ்தர் ராஜாத்தியைப்போல நாம் பாரப்பட்டு, அழிகிற நம் ஜனங்களுக்காக வைராக்கியத்துடன் திறப்பில் நிற்கிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

விரல் விட்டு எண்ணுகிற சொற்ப எண்ணிக்கையுள்ள எஸ்தர்களே இன்றைக்கு இருப்பது வேதனை. தேவன் என்னை பயன்படுத்தவில்லை என்று சொல்லி புலம்பிக் கொண்டிருக்கிற நாம் எஸ்தரைப் போல வைராக்கியமாய், சொந்த ஜீவனையும் பாராமல் எழும்பி செயல்பட்டால் எழுப்புதல் வெகு தூரத்தில் இல்லை சகோதரிகளே..!

செத்தாலும் சாகிறேன் என்று சொல்லி எழும்பின எஸ்தரின் வைராக்கியம் நம்மில் எழும்பும்போது, தேவனுடைய இருதயத்தை சந்தோஷப்படுத்துகிறவர்களாய் மாறுவோம்.

### கடினமான சூழ்நிலையிலும் பொறுமை:

ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கப்பெற்ற எஸ்தர், தன் இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் உடனே ராஜாவினிடத்தில் கூறிவிடவில்லை. பேசுவதில் பொறுமையாக இருந்தாள். எல்லாவற்றையும் திட்டமிட்டு மிகுந்த ஞானத்தோடு செயல்பட்டாள். ஆகவேதான் ஆமான் மொர்தெகாய்க்கு செய்து வைத்திருந்த அதே தூக்கு மரத்தில் ஆமான் ஏற்றப்பட்டான். யூதருக்கு இரட்சிப்பு கிடைத்தது.

பெண்களாகிய நாமும் எத்தனை கடினமான சூழ்நிலையிலும் பொறுமையாக இருக்க வேண்டும். சில சமயங்களில் சூழ்நிலைகள் கைமீறி போனதுபோல காணப்படும். இனி அடுத்த என்ன செய்வது என்று திகைக்கலாம். எப்படிப்பட்ட நிலையானாலும் பொறுமையுடனும், தேவ ஞானத்துடனும் பிரச்சனையை எதிர்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும்.

**"குணசாலியான ஸ்திரி தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்"** ( நீதிமொழிகள் 31:26) என்ற வசனத்தின்படி இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் பேசுகிறவர்களாய் அல்ல. தங்கள் நாவை அடக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சனையான சூழ்நிலைகளில் நாம் செய்ய வேண்டியது:

- உங்களை சுற்றி நடப்பதை அமைதியாய் நிதானித்துப் பாருங்கள்.
- தேவ ஒத்தாசையை, ஆலோசனையை பெறும்படி ஜெபத்தில் காத்திருங்கள்.
- பதட்டத்தை விட்டு வைராக்கியமாய், பொறுமையாய் ஞானத்துடன் பிரச்சனையை எதிர்கொள்ளுங்கள்.


## காணிக்கை செலுத்துவோர் கவனத்திற்கு..



நமது இயேசுவின் தொனி ஊழியங்களுக்கு காணிக்கை செலுத்த விரும்பினால் கீழ்காணும் QR CODE டை ஸ்கேன் செய்து ஆன்லைன் மூலம் உங்கள் காணிக்கைகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்திக் கொள்ளலாம்.

**VOICE OF JESUS MINISTRIES**

**(+91) 9788 404 333**

G Pay

Paytm



## கர்த்தர் நம்மோடு இருந்தால் நாம் பிரகாசிக்கிற விளக்காக ஒளி வீசுவோம். எழும்புங்கள், கர்த்தருக்கென்று பிரகாசியுங்கள்.

இதை தவறாமல் செய்தால், நிச்சயம் கர்த்தர் சூழ்நிலையை மாற்றுவார். கர்த்தர் உங்கள் சார்பில் நிற்பதை யாவரும் காணும்படியாக, உங்களை உயர்த்துவார். உங்கள் குடும்பத்திற்கும், ஊழியத்திற்கும், சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் வெளிச்சமாய் மாறி பிரகாசிப்பீர்கள்.

எளிய பெண் தான் எஸ்தர். தெரியாத இனத்தாரிடத்தில் வசித்தவள் தான். பெற்றோரை இழந்தவள் தான். எஸ்தர் பெண்களோடு பெண்களாய் கொண்டு போகப் பட்டவள் தான்.

ஆனால், கர்த்தர் அவளுடன் இருந்தபடியால் பட்டத்து ராணியாக உயர்த்தினார். கர்த்தர் நம்மை உயர்த்தவும், பயன்படுத்தவும் நம் வெளித்தோற்றமல்ல, இருதயத்தில் கர்த்தரிடத்தில் காண்பிக்கும் அன்பும், தேவனைக்குறித்த வைராக்கியமுமே போதுமானதாகும்.

### எழும்பிடுங்கள், நீங்கள் கர்த்தருக்கு தேவை:

பெண்களாகிய நாம் எழும்பி கிரியை செய்யும்படி கொடுக்கப்பட்ட தருணம் இது. இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால் இரட்சிப்பு வேறு வழியில் வரும். நாமோ இழந்துபோவோம்.

பெண்கள் விசேஷமானவர்கள். பெண்கள் என்று சொன்னதும் திருமணம் செய்வதும், குழந்தைகளை பெற்று வளர்த்து ஆளாக்குவதும், குடும்பங்களை நடத்துவதும் மட்டும் தான் என்பதாக பலர் நினைத்து தங்கள் வாழ்வை குறுக்கிக் கொண்டு, தேவன் எதற்காக இந்த உலகிற்கு தங்களை அனுப்பினார் என்பதையே மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல நம் கடமை.

பெண்களாகிய நாம் தேவ சித்தத்தை அறிந்து கொண்டு எஸ்தரைப்போல வைராக்கியமாய் எழும்பி கிரியைகளை நடப்பிக்க வேண்டும்.

கர்த்தருக்காய் வைராக்கியமாய் எழும்பும் போது, நம்மை தேவன் தமது கரத்தில் எடுத்து சரித்திரத்தை மாற்றியமைக்கும் சாதனை பெண்களாக பயன்படுத்துதை காண முடியும்.

கடைசிக்கால எஸ்தர்களே, உணர்வடைந்து எழும்புங்கள்.. கர்த்தருக்காக நீங்கள் செய்ய வேண்டிய மகிமையான காரியங்கள் அதிகம் உள்ளது. விசேஷித்தவர்களான நீங்கள் கர்த்தருக்கு வேண்டும்..! தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரமாக இன்று உங்களை அர்ப்பணிப்பீர்களா?



# கடவுள் மாம்சத்தில் பிறப்பதில்லை...!!!

வேதத்தின் ஆழங்கள்–செய்தி: சகோ. வின்சென்ட் செல்வகுமார்

சென்ற இதழில் பரவிக்கொண்டிருக்கும் சில புதுமையான கருத்துகளைக் குறித்துப் பார்த்தோம். அதில் *டுக்கேட்டிசம்* என்கிற கள்ள உபதேசக்காரர்களுடைய கருத்துகளைக் குறித்து ஆராய்ந்தோம். இவர்கள் இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதை நம்புவதில்லை. அதனால், இதற்கு எதிரான கருத்துகளைக் கற்பிக்கிறார்கள்.

இந்த உபதேசக்காரர்கள் இயேசுவினுடைய சரித்திர நிகழ்வுகள் எல்லாம் பிம்பம் தான் என்கிறார்கள். அவர் உண்மையிலேயே மாம்சத்தில் வெளிப்படவில்லை என்பது இவர்களுடைய கருத்தின் மூல சாரம்சம். உங்களுக்கு '*பிம்பம்*' என்கிற வார்த்தை தெரியும். அதாவது இமேஜ். தொட்டுப் பார்த்தால் ஒன்றும் இருக்காது.

இந்த உபசேதக்காரர்கள், '*இயேசு கிறிஸ்து என்பவர் மனிதராக வரவில்லை*'; அது மாத்திரமல்ல, '*அவர் ஒரு இறைதூதர்*' என்றும் பிற்காலத்தில் கருதினார்கள். மேலும் தானியேல் 12:1 ம் வசனத்தில், உங்களுக்கு என் தூதன் மிகாவேலை அனுப்புவேன் என்று சொன்னாரே, அது மாதிரி அனுப்பப்பட்ட தூதன் தான் இயேசுகிறிஸ்து என்றும் உபதேசம் பண்ண ஆரம்பித்தார்கள்.

இயேசு என்பவர் கர்த்தர் அல்ல என்பதும், அவர் பிதாவிற்கு சமானமானவர் இல்லை என்பதும் இவர்களுடைய உபதேசத்தின் பிரதான கருத்துகளில் ஒன்று. இவர்கள் பரலோகத்தில் இருக்கிற ஆவியானவரை நம்புவார்கள்; பிதாவை நம்புவார்கள். ஆனால் இடையில் குமாரன் என்கிற ஒரு வார்த்தை வருகிறது பாருங்கள், அதை அவர்கள் நம்ப மாட்டார்கள்.

'*பரலோகத்தில் அப்பா, பிள்ளை என்ற சொந்தங்கள் இல்லை. அதுவும் கடவுளுக்கு இல்லவே இல்லை. கர்த்தர் ஒருவர் தான். அதனால், இவர் ஒரு மாய பிம்பம். பரலோகத்தில் போய் பார்த்தால், இந்த மாய பிம்ப மெல்லாம் இருக்காது. அதனால் இவர் கர்த்தர் இல்லை; இவர் மாம்சத்தில் வெளிப்படவும் இல்லை; இவர் பிதாவிற்கு சமானமானவர் இல்லை*' என்பது இவர்களுடைய ஆணித்தரமான கருத்து.

இவர்களுடைய கொள்கையை *நாஸ்டிசிசம்* என்கிற ஞானத்தை பிரதானப்படுத்துகிற உபதேசக்காரர்கள், பிரதான போதனையாக கைக்கொண்டார்கள்.

நான் இவைகளை உங்களுக்கு மேற்போக்காக சொன்னேன். ஆனால் இவர்கள்நிறைய வசனங்களை காண்பித்து, அறிவோடும் ஞானத்தோடும் லாஜிக்காக பேசி, ஜனங்களை வஞ்சித்து நம்ப வைத்தார்கள். மேலும், இவர்கள் இரட்சிப்பு என்பது ஞானத்தினால் மாத்திரம் தான் உண்டாகும் என்று நம்பினார்கள். நாம் கிறிஸ்துவின் இரத்தத் தினால், அவருடைய பாடுகள், மரணத்தை விசுவாசிக்கிறதினால், இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கை செய்கிற



தினால், இயேசுவை கர்த்தர் என்று ஏற்றுக் கொள்வதினால், ஒரு மனிதனுக்கு இரட் சிப்பு உண்டாகிறது என்று நம்புகிறோம்.

ஆனால், இவர்கள் "*இரட்சிப்பு என்பது ஞானத்தினால் தான் உண்டாகிறது. ஏனென்றால், வேதத்தில் இயேசுவே சொல் லியிருக்கிறார், ஒன்றான மெய் தேவனை யும், அவர் அனுப்பின குமாரனையும் அறி வதே நித்திய ஜீவன். அப்படியானால், அறிவு தான் நித்திய ஜீவன்*" என்று குழப் பிப் பேசுவார்கள். இயேசுவின் வழியாக வரும் இரட்சிப்பையும், அவர் சிலுவை யில் சிந்தின இரத்தத்தையும் அவர்கள் ஒரு பிம்பமாகவே கருதினார்கள்.

நான் சொல்லும்போது இது உங்களுக்கு புரியாது. ஆனால் இவர்கள் ஞானத்தோ டும் புத்தியோடும் பேசும்போது, நீங்கள் கேட்டு கைதட்டுவீர்கள். அந்த அளவிற்கு லாஜிக்கோடு பேசுவார்கள்.

### இயேசுவின் வாழ்க்கை சம்பவம் ஒரு மாயபிம்பம்!

'*இயேசுவின் வாழ்க்கை, அவர் செய்த அற் புதங்கள், அவருடைய சிலுவை மரணம் எல்லாமே பரலோகத்திலிருந்து காட்டப் பட்ட ஒரு வடிவமைப்பு; இவைகளெல் லாம் மாய தோற்றங்கள். இந்த தோற்றங் கள் மனிதர்களுக்கு கடவுள் நம்பிக் கையை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட் டது*' என்கிறார்கள்.

ஏனென்றால், கர்த்தரைக் குறித்தும், பரலோ கத்தைக் குறித்ததுமான நம்பிக்கை யூதர் களுக்கு மாத்திரமல்ல, உலகம் முழுவதும் இருக்கிற ஜனங்களுக்கு கொண்டுபோக வேண்டும். அதனால், பரலோகம் என்ன செய்கிறது என்று ஒரு திட்டமிட்டு, சில தோற்றங்களை உருவாக்கி, அப்படியே பூமியிலே சில காட்சிகளை நடப்பித்துக் காண்பித்து, அதை சரித்திர பதிவுகளாக்கி, உலகத்திலுள்ள அநேக தேசங்களில் கர்த் தரை அறியாதவர்களை திருப்பிப் பார்க்க செய்யப்பட்ட மாய தோற்றங்களே இவை கள் என்று கருதுகிறார்கள்.

நாம் எப்படி ஒரு காட்சியை திரைப்பட மாக எடுக்கிறோமோ, அதுமாதிரி, இறை வன் இருக்கிறார், பரலோகம் என்று ஒன்று இருக்கிறது என்று நம்மை நம்பப்பண்ணு வதற்காக, பரலோகம் நமக்கு 3 டைமன் சனில் பரலோகத்தின் பிம்பங்களைக் கொண்டு நடத்திக் காண்பித்த நாடகம்தான் சுவிசேஷம், என்பது இவர்களுடைய கருத்து.

'*கடவுள் இருக்கிறார் என்கிற நம்பிக் கையை உலகத்தின் பல்வேறு விதமான ஜனங்களும் ஏற்றுக்கொள்வதற்கும், நம் புவதற்கும் தான் காட்சிகள் உலகத்திலே காட்டப்பட்டது. ஆனால், இந்தக் காட் சியை மாத்திரம் ஏற்றுக்கொள்வதினால் இரட்சிக்கப்பட முடியாது; இது முதல் நிலையில் ஜனங்களை ஈர்ப்பதற்காக பர லோகம் செய்த யுக்தி. ஆனால் இதை நம்பி ஏற்றுக்கொண்டவர்களும் ஞானத்தினால் மாத்திரம் தான் உண்மையான இரட்சிப்பை அடைந்து கொள்ள முடியும்*' என்று இவர் கள் போதித்தார்கள்.

இந்தப் போதனையானது முதல் நூற்றாண் டில் ஆரம்பித்து, அநேக விசுவாசிகளாலே கடைப்பிடிக்கப்பட்டது. இதைத்தான் யோவான், இவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவியினால் உண்டாக்கப்பட்டவர்கள் என்று சொல்லுகிறார். இந்த உபதேசக்கா ரர்களை அந்திக்கிறிஸ்துக்கள் என்று சொன் னார்கள்.

இந்த உபதேசத்தைக் கொண்டு வருவது அந்திக்கிறிஸ்துவின் ஆவி. இந்தக் கொள் கைகாரர்கள் இப்படியாக இருந்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், இவர் களைப் பற்றி வேதத்தில் குறிப்பிடப்பட்டி ருக்கிறது. வாசித்துப் பாருங்கள்.

***1 யோவான் 4 : 1-6***

***1 பிரியமானவர்களே, உலகத் தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரி சிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவ னால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.***

***2 தேவஆவியை நீங்கள் எதி னாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ் துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயி ருக்கிறது.***

***3 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண் டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்து வினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக் கிறது.***



**மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. அது அந்திக்கிறிஸ்துவின் ஆவி.**

*4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர்.*

*5 அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால், உலகத்துக்குரிய வைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.*

*6 நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.*

இந்த வசனத்தில், "மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவின் ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" என்று சொல்லுகிறார்.

அதாவது, 'நான் இந்த நிரூபத்தை எழுதிக் கொண்டிருக்கிறபொழுதே அது இருக்கிறது; அந்த உபதேசக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவை அறிக்கை செய்கிறதில்லை' என்பதாக அர்த்தப்படுத்துகிறார்.

அப்படியானால் என்ன அர்த்தம், முதல் நூற்றாண்டிலேயே, அவர்கள் இயேசுவை மாம்சத்தில் பார்த்து, அவரோடு பழகி, சாப்பிட்டு, ஊழியம் செய்த காலத்திலேயே இயேசு மாம்சத்தில் வெளிப்படவில்லை என்று சொல்லுகிற கூட்டம் இருக்குமென்றால், இப்பொழுது அவர்கள் எவ்வளவு அதிகமாய் இருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள் என்று வசனம் சொல்லுகிறது. அப்படியானால், இந்த உபதேசக்காரர்களை ஜெயிக்க ஒரே வழி என்னவென்றால், அது தேவனால் உண்டாயிருக்கிற மனிதனால் தான் முடியும். மற்றபடி அவர்களிடம் வாக்குவாதம் பண்ணி ஜெயிக்க முடியாது. ஏனெனில், உலகத்திலிருக்கிறவரிலும், உங்களில் இருக்கிறவர் பெரியவர்.

டுக்கேட்டிசம் என்று சொல்லுகிற இந்த உபதேசக்காரர்கள், உலகத்திற்குரியவர்கள். ஆகையால், உலகத்திற்குரியவைகளை பேசுகிறார்கள். அதனால் உலகம் அவர்களுக்கு செவிக்கொடுக்கும்.

இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், இந்த ஆவி இப்பொழுது தீவிரமாய் கிரியை செய்கிறது. இன்னும் கொஞ்ச நாளிலே இந்த உபதேசத்தை பகிரங்கமாய் கொண்டு வருவார்கள். உலகமும் அவர்களுக்கு செவிக்கொடுக்கும்.

ஏனென்றால், இந்த உபதேசத்தை அந்தக் காலத்தில் ஜனங்களுக்கு விளங்க வைப்பது கடினம். ஆனால், விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்த சூழ்நிலையில், இயேசு மாம்சத்தில் வெளிப்படவில்லை என்பதை நிரூபிக்க பல உதாரணங்களை காண்பிக்க முடியும். கிராபிக்ஸ் மூலமாக மற்றும் கதிர்கள் மூலமாக பிம்பங்களை உருவாக்கி காண்பிக்க முடியும். இப்படி 3D இல் உருவாக்கி காண்பிக்க முடியுமானால்,பரலோகத்தை ஏன் காண்பிக்க முடியாது. இதை இந்த உபதேசக்காரர்கள் இனி பேசும்போது உலகம் அவர்களுக்குச் செவிகொடுக்கும். இனி வரும் நாட்களில் இதை அநேகர் நம்புவார்கள். அது விஞ்ஞானப்பூர்வமாக சொல்லப்படுகிறதினால், அதை ஏற்றுக்கொள்வார்கள்.

மேலும் யோவான், நாங்கள் தேவனால் உண்டானவர்கள். தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிக்கொடுக்கிறான் என்று சொல்லுகிறார். அப்படியானால், தேவனை அறிந்தவர்கள் தான் வேதத்திற்கும், வேத வசனத்திற்கும், கர்த்தருடைய உண்மையான ஊழியர்களுக்கும் செவிகொடுப்பார்கள்.

தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை. நாங்கள் எவ்வளவு பேசினாலும், தர்க்கம்பண்ணி, ஏற்றுக்கொள்ளாமல் குழப்பப்படுத்திப் பேசுவார்கள்.

ஆனால் தேவனால் உண்டாயி ருக்கிறவன் எங்கள் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளை விசுவாசிப்பான். இதனால் சத்திய ஆவியின்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோமே என்று யோவான் சொல்லுகிறார்.

யோவான் ஊழியம் செய்த காலத்தில், சபைகள் பெருகிக் கொண்டிருந்தது; சுவிஷேசம் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது; இதற்கு நடுவில் ஒரு கூட்டம் உள்ளே நுழைந்து, இயேசு ஒரு மாயத்தோற்றம்; அங்கே காட்டப்பட்ட நிகழ்வுகள் எல்லாம் ஒரு ப்ரொஜெக்ஷன் என்பதைப் பற்றி சொல்லி, மாம்சத்தில் யாரும் வெளிப்படவில்லை என்கிற கருத்தை முன்வைத்தார்கள்.

## பக்தியுள்ள ராஜாக்கள்

**அசீரிய ராஜாக்களுக்கு தெய்வ பக்தி அதிகமுண்டு. பாபிலோனிய ராஜாக்களைப் பொறுத்தவரை அவர்கள் வருடத்திற்கு ஒரு முறை கோயில்களுக்கு போவதுடன் சரி. ஆனால், அசீரிய ராஜாக்கள் அப்படியல்ல. இவர்கள் ராஜாவாக பணி செய்வதுடன் கோயில்களில் பிரதாண ஆசாரியர் போலவும் செயல்பட்டனர். காரணம், அசீரிய ராஜாக்களை அசீரியாவின் பிரதான கடவுள் அசூரின் பிரதிநிதியாகவே மக்கள் கருதினார்கள். அசீரியாவில் வணங்கப்பட்டு வந்த கடவுள்களில் பிரதானமானது அசூர். வீரத்திற்கும் விவேகத்திற்கும் இது கடவுளாக கருதப்பட்டது. இது தவிர எழுத்துகளுக்கு கடவுளான நேபு, மற்றும் யுத்தத்திற்கு கடவுளான நின்னுர்தா மற்றும் காதலுக்கும், இச்சைக்கும் கடவுளான இஷ்டார் போன்றவற்றையும் ஜனங்கள் வணங்கி வந்தனர். இத்தனை தெய்வங்கள் இருந்த போதிலும் இவற்றுள் மிகவும் செல்வாக்கு பெற்ற கடவுள் யாராயிருக்குமென்று நினைக்கிறீர்கள்? கரெக்ட்... இஷ்டார் தான். இஷ்டாருக்கு நினிவேயில் மிகப்பெரிய கோவில்கள் இருந்தன. ஒரு முறை எகிப்திய ராஜாவுக்கு உதவி செய்ய இஷ்டாரின்(Ishtar) சிலையை அனுப்பி வைத்தாக அசீரிய குறிப்புகளில் காணப்படுகிறது.**



துணுக்குச் செய்தி



# யார் அந்திக்கிறிஸ்து ?

**சாத்தானுடைய மூன்று ஆள்த்துவங்களிலே குமாரனுடைய ஸ்தானத்தில் இருக்கிறவன் பெயர் தான் அந்திக்கிறிஸ்து. இயேசு வருவதற்கு முன்பாக ஏழு வருடங்கள் இந்த உலகத்தை ஆளுமை செய்வது இவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பணி.**

மேலும் அவர் சொல்லுகிறார், வாசித்துப் பாருங்கள்..

*2 யோவான் 7, 8*

*மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிபட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்.*

*உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.*

இதில் அவர் என்ன சொல்லவருகிறாரென்றால், இவர்களுடைய வார்த்தைகளுக்கு நீங்கள் செவிகொடுத்து, இது லாஜிக்காக, விஞ்ஞானப் பூர்வமாக இருக்கிறது என்று நம்பி ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தால், உங்கள் செய்கையின் பலனை இழந்துப்போவீர்கள் என்கிறார்.

உங்களுடைய பூரண பலனை பெற முடியாமல், உங்கள் பெலனெல்லாம் உங்கள் கையை விட்டு போய்விடும். அதனால் ரொம்ப கவனமாய் இருங்கள் என்று குழந்தைகளுக்கு சொல்வதைப் போல புத்திமதி சொல்லுகிறார். இப்படி வஞ்சிக்கிறவர்களைத்தான் அந்திக்கிறிஸ்துகள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### யார் அந்திக்கிறிஸ்து ? யார் அந்திக்கிறிஸ்துகள் ?

நீங்கள் நன்றாக ஒரு காரியத்தை தெரிந்து கொள்ள வேண்டும். அந்திக்கிறிஸ்து என்பவன் வேறு. அந்திக்கிறிஸ்துகள் என்பவர்கள் வேறு. அந்திக்கிறிஸ்து என்பவன் ஒருவன் தான். நான் இங்கு இந்த காரியத்தை கொஞ்சம் விளக்கி சொல்லிவிடுகிறேன். கர்த்தருக்கடுத்த காரியத்தில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று எப்படி மூன்று திரித்துவங்கள் சொல்லப்படுகிறதோ, அதுபோல, சாத்தானுக்கும் மூன்று திரித்துவங்கள் இருக்கிறது.

மூன்று திரித்துவத்தில், பிதாவானவர் இருக்கிற மாதிரி வலுசர்ப்பம் இருக்கிறான்; இரண்டாவது இடத்தில் அந்திக்கிறிஸ்து; மூன்றாவது இடத்தில் கள்ளத்தீர்க்கதரிசி.

இந்த மூன்றுமே சாத்தானுடைய திரித்துவம். இந்த மூன்று பேருடைய செயல்பாடுகளைக் குறித்து, வெளிப்படுத்தின விசேஷத்தில் நிறைய சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து மாம்சத்தில் திரும்பி வந்து, இந்த உலகத்தை எப்படி ஆயிரம் வருடம் அரசாளுமை பண்ணுவாரோ, அதுமாதிரி, பிசாசானவன் தன் குமாரனை அனுப்பி, ஏழு வருஷம் உலகத்தை ஆளுமை செய்யப்போகிறான். அதற்குத் தான் உலகத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

உலக ஆளுமை என்றால், ஒரு தேசத்தை, ஒரு கண்டத்தை மாத்திரம் ஆளுமை செய்வதல்ல;ஒட்டு மொத்த உலகையும் ஆளுமை செய்வது. இயேசு அப்படித்தான் ஆளுமை செய்யப் போகிறார். அதற்கு முன்பாக சாத்தான் தன்னுடைய குமாரன் ஸ்தானத்தில் இருக்கிற அந்திக்கிறிஸ் துவை அனுப்புவான்.

மூன்று ஆள்த்துவங்களிலே குமாரனுடைய ஸ்தானத்தில் இருக்கிறவன் பெயர் தான் அந்திக்கிறிஸ்து. இயேசு வருவதற்கு முன்பாக ஏழு வருடங்கள் இந்த உலகத்தை ஆளுமை செய்வதுதான் இவனுக்குக் கொடுக்கப்பட்ட பிரதான பணி. இந்த ஏழு வருடங்களில், முதல் மூன்றரை வருடங்கள் உபத்திரவக் காலம் என்றும்; இரண்டாவது மூன்றரை வருடங்கள் மகா உபத்திரவ காலம் என்றும் சொல்லப்படும்.

அப்படியானால், ஒரு ராஜா தான். ஆனால், பூமி முழுவதும் அந்தந்த தேசங்களில் ஆளுமை செய்வதற்கு, பிரதிநிதிகள் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சட்டம், ஆளுமை ஒரு இடத்திலிருந்துதான் புறப்படும். இதனால் தான் இன்றைக்கு உலகத்திலிருக்கிற பல அமைப்புகள் 'க்ளோபலிஷேசன்'(Globalization) என்று சொல்லுகிற உலகமயமாக்கப்படுதலுக்கு கொண்டு வரப்பட்டுக்கொண்டிருக்கிறது. அப்படியானால், வரப்போகிறவனுக்கு பெயர் தான் அந்திக்கிறிஸ்து.

இது குறித்து வேதத்தில் வாசித்துப் பாருங்கள், *1 யோவான் 2: 18*

*பிள்ளைகளே, இது கடைசிக் காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்.*

அப்படியானால், முதல் நூற்றாண்டு சபையிலேயே, அந்திக்கிறிஸ்துவின் வருகையைப் பற்றி பிரசங்கித்திருக்கிறார்கள். இந்த வசனத்தில் பார்ப்போமானால், அந்திக்கிறிஸ்து என்று ஒரு ஆள் பற்றி சொல்கிறது. அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்திக்கிறிஸ்துகள் என்பவர்கள் வரப்போகிறவனாகிய அந்திக்கிறிஸ்து அல்ல. இவர்கள் அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவியை உடையவர்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நடுவே இருக்க மாட்டார்கள். இவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள் என்று இவர்களைக் குறித்தே யோவான் இந்த வசனத்தில் சொல்லியிருக்கிறார்.

அந்திக்கிறிஸ்துகள் என்பவர்கள் வரப்போகிற அந்திக்கிறிஸ்துவிற்கு பாதையைச் செவ்வைப்படுத்துகிறவர்கள். ஜனங்களு

டைய இருதயத்தை குழப்பி, வரப்போகிறவனாகிய அந்திக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படியாக அவர்களுடைய மனதை ஆயத்தப்படுகிறது இவர்களுடைய வேலை.

இவர்கள் தான் கள்ள உபதேசம் பண்ணுவார்கள்; ஆராதனையை மட்டுப்படுத்துவார்கள்; ஆண்டவராகிய இயேசுவின் கர்த்தத்துவத்தை குறைத்துப் பேசுவார்கள். இவைகளெல்லாம் இவர்களுடைய ஆயத்தம். ஜனங்களுடைய மனநிலையில் மாற்றங்களை கொண்டு வந்து, அந்திக்கிறிஸ்து வரும்போது, அவனை ஏற்றுக்கொள்வதற்கு அவர்களுடைய இருதயத்தை இப்பொழுதிருந்தே தயார்நிலைப்படுத்துவது இவர்களுடைய வேலை தான்.

அரசியல் கட்சிகளைப் பார்த்தோமானால், தேர்தல் சமயங்களில் நிறைய மீம்ஸ் போன்ற காரியங்களை வைத்து, ஜனங்களுக்கு அந்த ஆட்சியைப் பற்றின செய்தியை பரவச்செய்து கொண்டேயிருப்பார்கள். இவைகலெல்லாம் ஜனங்களுடைய இருதயத்தை திசைதிருப்பி தயார் நிலைப்படுத்துவதற்கான காரியங்கள்.

இது மாதிரி, அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்கு ஆயத்தப்படுத்துகிறவர்கள் பெயர் தான் அந்திக்கிறிஸ்துகள். இவர்கள் எங்கெல்லாம் இருப்பார்கள் என்றால்? இவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களிலும் இருக்கிறார்கள்; சபை நடத்துகிறவர்கள் நடுவிலும், சுவிசேஷம் சொல்கிறவர்கள் நடுவிலும், ஊழியர்கள் நடுவிலும் இருக்கிறார்கள். இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்களுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டே யிருக்கிறார்கள்.

நீங்கள் மேடையிலிருந்து சொல்லப்படுகிற எல்லாமே உண்மை என்று நம்பிவிடாதீர்கள். இவர்கள் மாய உபதேசங்களை கொஞ்ச கொஞ்சமாய் கொண்டுவந்து, ஜனங்களுடைய விசுவாசத்தின் தன்மையை இளகிப்போகப் பண்ணுகிறார்கள். இப்படியாக அந்திக்கிறிஸ்து வரும்போது, அவனை ஏற்றுக்கொள்ளப்பண்ணும்படிக்கு கள்ள உபதேசங்களினாலும் மற்ற முயற்சியினாலும் இதைச் செய்கிறவர்களுக்கு பெயர்தான் அந்திக்கிறிஸ்துக்கள்.

‘அவன் ஆளுமை செய்வதற்கு, ஏழு வருஷத்திற்கு முன்பாக ஒரு மூன்று வருஷம் அந்திக்கிறிஸ்துக்கள் வந்து ஆயத்தப்படுத்தினால் என்ன? இயேசு இந்த உலகத்தில் முதல் முறை வரும்போது, அதற்கு முன்பாக பாதையை செவ்வைப்பண்ண வந்த யோவான் ஆயிரம் வருஷத்திற்கு முன்பாகவா வந்தார்? இயேசு வருவதற்கு கொஞ்சம் முன்பாக தானே வந்தார். அது மாதிரி வர வேண்டியது தானே’ என்று நீங்கள் கேட்கலாம்.

இல்லை. இரண்டாயிரம் வருஷத்திற்கு மேலாக அந்திக்கிறிஸ்துகள் அந்திக்கிறிஸ்துவுக்குப் பாதையை செவ்வைப்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை பெரியது. இவர் கள் உலகம் முழுவதையும் இணைக்க வேண்டும்; உலகம் துண்டு துண்டாகப் பிரிந்திருக்கிறது.

உலகத்தின் அரசியல், கலாச்சாரம், மதங்கள், ஆளுமைகள், உலக தேசங்கள் என்று நிறைய பிரிந்திருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு அந்திக்கிறிஸ்துகள் பெருவாரியாக முயற்சி பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அதனால் இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டவர், உங்களுக்காக இரத்தம் சிந்தினவர் என்ற நாம் கொண்டிருக்கிற நம்பிக்கையை அவமாக்குவது தான் இவர்களுடைய முழு நேரப்பணி.

இந்த உபதேசத்தை அவர்கள் கர்த்தருடைய ஜனங்கள் நடுவில் தீவிரமாய் பரவச்செய்ய ஆரம்பித்தார்கள். இந்த உபதேசத்தைக் குறித்து 1 யோவான் 2 : 22, 23 ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

*இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.*

*குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.*

இந்த வசனத்தில் சொல்லியிருக்கிறபடி, இயேசுவை கிறிஸ்து அல்ல என்று சொல்லுகிறவன் தான் பொய்யன். பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக் கிறிஸ்து. அவன் பிதாவையும் மறுதலிப்பான்; குமாரனையும் மறுதலிப்பான். அவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல; ஒருவன் குமாரனை மறுதலித்துவிட்டு, பிதாவை கனம் பண்ணுவதைப் போல காண்பிக்கிறான் என்றால், அவன் பிதாவையுடையவனல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.


யூதர்கள், இஸ்ரவேலர்கள் பிதாவை கனம் பண்ணுவார்கள்; ஆனால் குமாரனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் இயேசுவை அறியவில்லை. ஆனால், பிதாவை கனம் பண்ணுகிறார்களே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் வசனம் சொல்லுகிறது, ஒருவன் குமாரனை மறுதலித்துவிட்டாலே, அவன் பிதாவை உடையவனல்ல.


அப்படியானால், இயேசு கிறிஸ்துதான் மையப்பொருள். நீங்கள் இயேசுவை அறிக்கை செய்தால், பிதாவை அறிக்கை செய்ததிற்கு சமமாகிவிட்டது. நீங்கள் இயேசுவை அறிக்கை பண்ணாமல், பிதாவை மாத்திரம் அறிக்கை செய்தால், உங்களிடத்தில் பிதாவினுடைய கிரியை இல்லை; நீங்கள் பிதாவை உடையவர்களும் இல்லை.


சில மார்க்கத்தார், இயேசுவை நம்ப மாட்டார்கள். ஒரே இறைவனை நம்புகிறோம். அவரை பிதா என்று நீங்கள் சொல்வதை, நாங்கள் வேறு பெயரில் சொல்கிறோம் என்பார்கள். நாங்கள் ஓர் இறைக்கொள்கையைக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னால்கூட, எவன் ஒருவன் குமாரனை நம்பவில்லையோ, அவன் பிதாவை உடையவன் இல்லை என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களைப் பற்றின இன்னும் சில காரியங்களை நாம் அடுத்த இதழில் பார்க்கலாம்.



**நீங்கள் இயேசுவை அறிக்கை செய்தால், பிதாவை அறிக்கை செய்ததற்கு சமமாகிவிட்டது. நீங்கள் இயேசுவை அறிக்கை பண்ணாமல், பிதாவை மாத்திரம் அறிக்கை செய்தால், உங்களிடத்தில் பிதாவினுடைய கிரியை இல்லை.**




புத்தகங்களை அமேசான் மற்றும் ப்ளிப்கார்ட்டிலும் பெறலாம்

amazon flipkart.com

புத்தகங்களைப் பெற கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்

**(+91) 9788 404 333**

# ஆவிக்குரிய வாழ்விற்கு உதவும் அரிய புத்தகங்கள்

- வேதாகம துணுக்குச் செய்தி- 2 பாகம்
- ஆழங்கள் சொல்லும் சாட்சி- 2 பாகம்
- ஜாலி ஹோம்- சிறுவர்க்கு- 2 பாகம்
- வெளிப்படுத்தின விசேஷ செய்திகள்
- எச்சரிக்கைச் செய்திகள்
- ஜெபிக்கலாம் வாங்க..
- ஜெபிக்க வேண்டிய தீர்க்கதரிசனங்கள்
- கடைசிக்கால ஆபத்துகள்
- தள்ளுபடியாகமக் கதைகள்
- வேதாகம ஜாதிகள்
- முடிவுக்கு முன்..

- RAISING A COMPANY OF PROPHETS
- ENDTIME CATASTROPHIES
- ENDTIME WARNINGS
- VOICE OF TRUMPETS- BOOK 1
- VOICE OF TRUMPETS- BOOK 2
- APOCALYPSE

- ECHARIKKAI SEITHIGAL-MALAYALAM
- ANTHIMA KALA ABATHUKAL - MAL
- ANTHIYAKE MUNNA- KANNADA
- ECHARIKE SUDTHIKALU - KANNADA
- KADAYE KALA ABATHU - KANNADA
- ANTHIYAKALA ABATHU- TELUGU